மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 443, திரு. ஏ. கே. சி. சுந்தரவேல், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

443—

திருப்பத்தூர் அருகே புறவழிச்சாலை அமைத்தல்.

*5287 திரு. ஏ. கே. சுந்தரவேல் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் அருகே புறவழிச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திட்டம் ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் நகரத்தில் உள்ள சாலைகளில் போக்குவரத்து நெரிசல்கள் அதிகமாக உள்ளதால அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுகின்றன. அதனால் பொது மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான விபத்திலிருந்து மக்களைச் காப்பாற்ற புற வழிச்சாலையை அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற கேள்வி புறவழிச் சாலை அமைக்க வேண்டும் என்டது, இன்றைக்கு எல்லா பெரு நகரங்களிலும் இந்தக் கோரிக்கை எழுந்து கொண்டிருக் கிறது. ஆகவே, இதைவிட பெரிய நகரங்களுக்கு எல்லாம் முன்னு ரிமை கொடுத்து, இன்றைக்கு கோவை, மதுரை, போன்ற இடங்க ளிலே அந்தப் பணிகளைச் செய்து கொண்டிருக்கிறோம். இன்றை க்கு இவர் சொல்லுகின்ற இடத்திலே ஏறத்தாழ 6 கிலோ மீட்டர் சாலை அமைக்க வேண்டியிருக்கிறது. 60 இலட்சம் ரூபாய் தேவைப் படுகிறது. உடனடியாக இந்தத் திட்டத்தை எடுத்துச் செய்வதற்கு நிதி ஆதாரம் இல்லாத காரணத்தால், இன்றைக்கு திருப்பத்தூர் மக்கள் நலனை கருத்தில் கொண்டு, கொண்டு வருங்காலத்தில் அதைப்பற்றி பரிசீலிக்கலாம் என்று இந்த அரசு கருதுகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 444, டாக்டர் ஜெ. பரந்தாமன், திரு. கே. ஏ. மனோகரன், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

444—

பச்சகுப்பம் இரயில்வே கேட் அருகில் மேம்பாலம் கட்டுதல்.

* 5343 டாக்டர் ஜெ. பரந்தாமன் :

திரு. கே. ஏ. மனோகரன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மாதனூர் ஒன்றியம், பேரணாம்பட்டு தொகுதி, பச்ச குப்பம் இரயில்வே கேட் அருகில் சாலையில் மேம்பாலம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது துவங்கப்படும் ;

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பச்சகுப்பம் ரயில்வே கேட் அருகில் மேம்பாலம் கட்டுவதற்கு தேவையான இடத்தை கையகப்படுத்துவதற்காக இன்றைக்குப் பணிகள் நடைப்பெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நிலம் கையகப்படுத்தப்பட்ட பின்பு அந்தப் பணி மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் ஜெ. பரந்தாமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ''ஆம்,, என்று பதில் சொன்னதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொளகிறேன், வெற்றிப் பயணத்தை யாராலும் நிறுத்த முடியாத மாண்புமிகு இதய தெய்வம் முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) ஆம்பூர் பச்சகுப்பம் கேட்டினால் நின்று செல்ல வேண்டி வந்ததால் பேரணாம்பட்டு தொகுதி மக்கள் கோபம் கொண்டு இந்த கேட்டை கண்டிக்க, தண்டிக்க மேம்பாலம் கட்ட விரும்புகிறார்கள். போக்குவரத்து நெரிசலை கருத்தில் கொண்டு நேரம், எரிபொருள் இரண்டையும் சேமிக்க முடியும் என்பதால் இந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற முடியுமா என்றும், திட்ட மதிப்பீடு எவ்வளவு என்பதையும் அறிய விரும்புகிறேன்.